# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

www.dhinathdhalam.com

ஆசிரியர்:முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A., PGDJMC.,Ph.D. **DHINATH DHALAM** Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர்: முனைவர்: ஃபாரூக் அலி எம். B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 167 | ஞாயிற்றுக்கிழமை Sunday | 13.09.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode


# சவால்களை சமாளிக்க 'விதிகளை வடிவமைக்கும் சக்தியாக' மாற வேண்டும்; பிரிக்ஸ் மாநாட்டில் பிரதமர் மோடி பேச்சு



'குளோபல்சவுத்'(வளரும் மற்றும் ஏழை நாடுகள் அடங்கிய பகுதி) நாடுகள் 'விதிகளை வடிவமைக்கும் சக்தியாக' (rule shaper) மாற வேண்டும் என்று பிரதமர் மோடி கூறினார்.

உக்ரைன் மற்றும் மேற்கு ஆசியப் போர்களின் உலகளாவிய தாக்கங்களிலிருந்து, வளரும் பொருளாதாரங்களை பாதுகாப்பது குறித்து விவாதிக்கப்படவுள்ள இரண்டு நாள் வருடாந்திர பிரிக்ஸ் உச்சிமாநாட்டைத் தொடங்கி வைத்து பிரதமர் மோடி பேசியதாவது:-

பிரிக்ஸ்அமைப்புஉலக அரங்கில் தனித்துவமான அடையாளத்தை நிறுவியுள்ளது. இந்த அமைப்பு யாருக்கும் எதிரானதுஅல்ல.இன்று, உலகளாவியநெருக்கடிகளை எதிர்கொள்வதில் 'குளோபல் சவுத்' நாடுகள் முன்னணியில்உள்ளன. ஆனால் முடிவெடுக்கும் செயல்பாட்டில் பின்வரிசையில் உள்ளன. இந்த 'சலுகை பிரமிடை' (pyramid of privilege) நாம் 'கூட்டாண்மைக்கான தளமாக' (platform of partnership) மாற்ற வேண்டும். அதாவது ஒவ்வொரு நாட்டிற்கும் குரல் இருக்கும், ஒவ்வொரு உறுப்பினருக்கும் பங்கு இருக்கும், மற்றும் மனிதகுலத்தின் வளர்ச்சியே ஒவ்வொரு முயற்சியின் மையமாகவும் இருக்கும் ஒரு தளமாக இது அமைய வேண்டும்.

இது தொடர்பாக, உலகளாவிய நிர்வாகச் சீர்திருத்தத்திற்கான 10 முன்மொழிவுகளை நாம் கூட்டாக உருவாக்க வேண்டும். அடுத்த உச்சிமாநாட்டிற்குள் அவற்றை ஒரு 'பிரிக்ஸ் சீர்திருத்த வரைபடமாக' (roadmap) வடிவமைக்க வேண்டும் என்றும் நான் முன்மொழிகிறேன்.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் (UNSC) உடனடி சீர்திருத்தம் தேவை.பாதுகாப்பு சபையின் சீர்திருத்தங்களை இனியும் தாமதப்படுத்த முடியாது.

பல்வேறு சவால்கள்

தற்போதைய உலகளாவிய நிர்வாக கட்டமைப்பு ஒரு பிரமிடை போன்றது. அதிகாரம் மற்றும் முடிவெடுக்கும் திறன் ஆகியவை உச்சியில் குவிந்துள்ளன. அதேசமயம்கீழ்மட்டங்களில் உள்ள நாடுகள் இந்த முடிவுகளால் பாதிக்கப்படுகின்றன, ஆனால் அவற்றை வடிவமைக்கவோமாற்றவோ இயலாத நிலையில் உள்ளன. 'பிரிக்ஸ்' கூட்டமைப்பில் பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா, தென் ஆப்பிரிக்கா, எகிப்து, எத்தியோப்பியா, ஈரான், ஐக்கிய அரபு அமீரகம், இந்தோனேசியா, சவுதி அரேபியா ஆகிய 11 நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன. இந்தக் கூட்டமைப்பின் 18-வது உச்சி மாநாடு டெல்லி பாரத் மண்டபத்தில் இன்றும், நாளையும் நடைபெறுகிறது. புதுடெல்லியில்இந்தஆண்டு நடைபெறும் உச்சி மாநாட்டுக்கு இந்தியா தலைமை தாங்குகிறது.

இந்த மாநாட்டை ஒட்டி டெல்லியில் மத்திய படைகள், டெல்லி காவல் துறையைச் சேர்ந்த 30,000-க்கும் மேற்பட்ட வீரர்கள் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். பாதுகாப்பு அச்சுறுத்தல்களைமுறியடிக்க போர் விமானங்கள், விமான எதிர்ப்பு பீரங்கிகள், ட்ரோன் எதிர்ப்பு சாதனங்கள், ஆகாஷ் ஏவுகணைகள் தயார் நிலையில் நிறுத்தி வைக்கப்பட்டு உள்ளன.

உலகம் எதிர்கொள்ளும் பல்வேறு சவால்களைச்சமாளிக்க 'குளோபல் சவுத்' நாடுகள் 'விதிகளை வடிவமைக்கும் சக்தியாக' மாற வேண்டும். பிரிக்ஸ் உறுப்பு நாடுகளை சேர்ந்த கடல்சார் பணியாளர்களின் (seafarers) பாதுகாப்பை உறுதி செய்வதற்காக அவர்களுக்கிடையேஒருஒருங்கிணைப்பை உருவாக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலினுடன் 'ஈழத் தமிழ்ப் பெண்கள் குரல்' அமைப்பினர் சந்திப்பு



தமிழக முன்னாள் முதல்-அமைச்சரும், தி.மு.க. தலைவருமானமு.க.ஸ்டாலினை 'ஈழத் தமிழ்ப் பெண்கள் குரல்' அமைப்பினர் சென்னையில் உள்ள அண்ணா அறிவாலயத்தில் சந்தித்தனர்.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது;-

"இலங்கைத் தீவில் தொடர்ந்து கொண்டிருக்கும் கட்டமைக்கப்பட்ட பண்பாட்டு மற்றும் தமிழர் தாயகக் கோட்பாட்டையே சிதைக்கும் இனஅழிப்பின் சாட்சியங்களாக தீவின் ஈழத்தமிழர் தாயகத்தின் எட்டு மாவட்டங்களான ஈழத்தின் திருகோணமலை மாவட்ட சாந்தமலர் அந்தோனிஜோன்சன், மட்டக்களப்பு மாவட்ட லக்ஸ்மணரஜனி ஜெயப்பிரகாசி, அம்பாறை மாவட்ட சிந்துஜா சௌயன், முல்லைத்தீவு மாவட்ட ஜெகதாம்பிகைவிக்கினேஸ்வரன்,வவுனியா மாவட்ட சரோஜா குகநேசதாசன்,

மன்னார் மாவட்ட பற்றீசியா அலெக்ஸ், கிளிநொச்சி மாவட்ட வன்செலீன் கந்தசாமி, சுபதர்சினி சச்சிதானந்தம், யாழ்ப்பாண மாவட்ட ஜமுனா சந்திரகுமார், விமலேஸ்வரி ஸ்ரீகாந்தரூபன் ஆகிய பத்து பெண்கள் அடங்கிய 'ஈழத் தமிழ்ப் பெண்கள் குரல்' அமைப்பினர் நேரில் சந்தித்து ஏற்கனவே இன அழிப்புக்கு எதிரான நடவடிக்கைகளில் பெரும் அர்ப்பணிப்போடு இயங்கிய தமிழக தொப்புள்கொடி உறவுகளுக்கு நன்றி தெரிவித்தனர்."

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழகத்தில் திடீர் மின்வெட்டு ஏன்? அமைச்சர் நிர்மல் குமார் விளக்கம்



சென்னை:"காற்றாலை மின்சாரம் தடைபட்டதால் தமிழகத்தில் இரண்டு நாட்கள் மின்சாரம் தட்டுப்பாடு ஏற்பட்டது. நேற்று மாலை முதல் அனைத்து இடங்களிலும் சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது" என மின்வெட்டுப் பிரச்சினை குறித்து தமிழக மின்துறை அமைச்சர் நிர்மல் குமார் விளக்கமளித்துள்ளார்.

தமிழகத்தில் மின்வெட்டு அதிகரித்துள்ளதாக எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டுகளை முன்வைத்து வரும் நிலையில், அமைச்சர் நிர்மல் குமார் வெளியிட்ட எக்ஸ் பதிவில், "காற்றாலை மின்சாரம் தடைபட்டதால் இரண்டு நாட்கள் மின்சாரம் தட்டுப்பாடு ஏற்பட்டது. இது தமிழகத்தில் மட்டுமல்ல பெரும்பாலான மாநிலங்களில் நிலவும் தட்டுப்பாடு.

நேற்று மாலை தமிழகத்திற்கு தேவையான மின்சாரம் பொது விநியோகத்தில் இருந்து கொள்முதல் செய்யப்பட்டது. நேற்று மாலை முதல் அனைத்து இடங்களிலும் சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

இது தமிழகத்தில் மட்டுமல்ல பெரும்பாலான மாநிலங்களில் நிலவும் தட்டுப்பாடு தமிழகத்தில் நேற்று மாலை முதல் போதுமான மின்சாரம் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்" என்று நிர்மல் குமார் விளக்கமளித்துள்ளார்.


செய்திகள்

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில்

இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/
CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt


# மீண்டும் உயர்ந்த ஆபரணத்தங்கம் விலை



சென்னையில் ஆபரணத்தங்கம் விலை சற்று அதிகரித்துள்ளது.

கடந்த சில தினங்களாகஏற்ற,இறக்கத்துடன் காணப்பட்டு வந்த தங்கம் விலை, நேற்று முன்தினம் சவரனுக்கு ரூ.880 அதிகரித்து, ஒரு சவரன் ரூ.1,14,040க்கும், கிராமுக்கு ரூ.110 உயர்ந்து ஒரு கிராம் ரூ.14,255க்கும் விற்பனை செய்யப்பட்டது.

இதற்கிடையே தங்கம் விலை நேற்று காலையில் ஒரேயடியாக சவரனுக்கு ரூ.1,920 குறைந்து, ஒரு சவரன் ரூ.1,12,112க்கும், கிராமுக்கு ரூ.240 குறைந்து ஒரு கிராம் ரூ.14,015க்கும் விற்பனை செய்யப்பட்டது. காலையில் அதிரடியாக குறைந்த தங்கத்தின் விலைமாலையில் சவரனுக்கு ரூ.1,120 உயர்ந்து, ஒரு சவரன் ரூ.1,13,240க்கும்,

ஒருகிராமுக்குரூ.140 உயர்ந்து ஒரு கிராம் ரூ.14,145க்கும் விற்பனை செய்யப்பட்டது.

இந்த நிலையில், தங்கம் விலை இன்று சற்று உயர்ந்துள்ளது. அதன்படி சென்னையில் ஆபரணத்தங்கம் விலை சவரனுக்கு ரூ.120 அதிகரித்து ரூ.1,13,360க்கு விற்பனை செய்யப்படுகிறது. கிராமுக்கு ரூ.15 உயர்ந்து 14,170க்கு விற்பனை செய்யப்படுகிறது.

வெள்ளி விலை

வெள்ளியின்விலையில் மாற்றமில்லை. ஒரு கிராம் வெள்ளி ரூ.250-க்கும், கிலோ ரூ.2,50,000-க்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

கடந்த மே மாதம் தங்கம் மீதான சுங்க வரியை 6 சதவீதத்தில் இருந்து 15 சதவீதமாக மத்திய அரசு உயர்த்தியது.

இதோடு கடந்த 1-ம் தேதி அன்று 'தேவையின்றி தங்கம் வாங்காதீர்கள்' என நாட்டு மக்களிடம் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார். இதையடுத்து தங்கம் விலை சந்தையில் ஏற்ற இறக்கத்துடன் விற்பனை ஆகிறது. இந்நிலையில், சென்னையில் நேற்று காலை தங்கம் விலை பவுனுக்குரூ.1,920 குறைந்தது. பின்பு மாலை பவுனுக்கு ரூ.1,120 உயர்ந்தது குறிப்பிடத்தக்கது.

## கோவை மலைவாழ் மக்களது தயாரிப்புகளுக்கு உரிய விலை கிடைக்கச் செய்வதுடன், இடைத்தரகர்களைத் தவிர்த்து விற்பனை மூலம் கிடைக்கும்

# பணப்பலன் நேரடியாக அவர்களையே சென்றடைய வேண்டும் என்ற நோக்கில், 162 ஸ்டால்களுடன் சிறப்பு கண்காட்சி கோவையில் நடைபெற உள்ளது



கோவை மலைவாழ் மக்களது தயாரிப்புகளுக்கு உரிய விலை கிடைக்கச் செய்வதுடன், இடைத்தரகர்களைத் தவிர்த்து விற்பனை மூலம்கிடைக்கும்பணப்பலன் நேரடியாக அவர்களையே சென்றடைய வேண்டும் என்ற நோக்கில், 162 ஸ்டால்களுடன் சிறப்பு கண்காட்சி கோவையில் நடைபெற உள்ளது.

இதில் பழங்குடியின மக்கள் மற்றும் பெண்கள் தயாரித்த இயற்கைப் பொருட்கள், கைவினைப் பொருட்கள் உள்ளிட்டவை நேரடியாக விற்பனை செய்யப்படுகின்றன.

மலைப்பகுதிகளில் தலைமுறை தலைமுறையாக இயற்கையோடும், வனத்தோடும் இணைந்து வாழும் பழங்குடியின மக்கள் பல்வேறு கைவினைப் பொருட்கள் மற்றும் இயற்கை சார்ந்த தயாரிப்புகளை உருவாக்கி வருகின்றனர்.

ஆனால், அவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு உரிய விலையும், நேரடியான சந்தைவாய்ப்பும்கிடைப்பது தொடர்ந்து சவாலாக இருந்து வருகிறது.இந்த நிலையில், சிவா டிரஸ்ட் சார்பில் பெண்கள் மற்றும் மலைவாழ் மக்கள் தயாரிக்கும் பொருட்களை நேரடியாகபொதுமக்களிடம் கொண்டு சேர்க்கும் வகையில் இந்தக் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நெல்லை, தென்காசி, கோவை, கிருஷ்ணகிரி, தர்மபுரி உள்ளிட்ட மாவட்டங்களில் கடந்த 32 ஆண்டுகளாக சமூகப் பணிகளில் ஈடுபட்டு வரும் இந்த அமைப்பு, பெண்களின் பொருளாதார முன்னேற்றத்திற்காக 2,000-க்கும் மேற்பட்ட உறுப்பினர்களுடன் செயல்பட்டு வருகிறது.

பெண்கள், மற்றும் மலைவாவ் மக்கள் சுயமாக வருமானம் ஈட்டுவதற்காக பல்வேறு தொழிற்பயிற்சிகளும் வழங்கப்பட்டு வருகின்றன. மலைவாழ் மக்கள் மற்றும் சுய உதவிக்குழுக்களின் கைவினைப் பொருட்களை நேரடியாக மக்கள் மத்தியில் கொண்டு சேர்க்கும் வகையிலான கண்காட்சி கோவை அவினாசி சாலையிலுள்ள சுகுணா திருமண மண்டபத்தில் செப்டம்பர் 12,13 ஆகிய தேதிகளில் நடைபெறுகிறது.

இது குறித்த செய்தியாளர் சந்திப்பில் நிர்வாக இயக்குனர் சுப்பிரமணியசிவாகூறியதாவது:-

மலைப்பகுதிகளில் வசிக்கும் மக்களிடம் நவீன இயந்திரங்கள் மற்றும் இணையதள வசதிகள் போதுமான அளவில்இல்லை.அவர்களின் உற்பத்தியை மேம்படுத்ததேவையான சில வசதிகளை ஏற்படுத்தித் தருவதுடன், எதிர்காலத்தில் இணையவழி சந்தை வாய்ப்புகளையும் உருவாக்க வேண்டும். அதன்படியே தற்போது இக்கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இங்கு மலைவாழ் மக்களின் தயாரிப்புகளான சீமார் முதல் அலங்காரப் பொருட்கள் வரை காட்சிப்படுத்தப்படுகின்றன. இணையதள வசதியுடன் கூடிய ஒரு மையத்தை மலைப்பகுதிகளில் உருவாக்கி, அங்கிருந்து அவர்களின் தயாரிப்புகளை ஆன்லைன் மூலம் சந்தைப்படுத்துவதற்கான வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டால், அவர்களின் உழைப்புக்கான நியாயமான வருமானத்தை நேரடியாக அவர்களிடம் கொண்டு செல்ல முடியும். தமிழ்நாடு அரசு இதற்கான ஏற்பாடுகளை செய்ய வேண்டும். என்றார்.



# கோவை மருத்துவக் கல்லூரியில் கண் தான விழிப்புணர்வு மற்றும் சிறப்புப் பயிற்சிப் பட்டறை நிகழ்ச்சி நடைபெற்றது

## மருத்துவர்கள், மருத்துவத்துறை மாணவர்கள் பங்கேற்று விழிப்புணர்வு அடைந்தனர்

தேசிய கண் தான விழிப்புணர்வு இருவார விழாவை முன்னிட்டு, இந்திய மருத்துவச் சங்கம் தமிழ்நாடு கிளை மற்றும் கோவை அரசு மருத்துவக் கல்லூரி இணைந்து நடத்திய "கண்ணொளி தானம் - கண் தானம் செய்வோம், ஒளி நிறைந்த வாழ்வை வழங்குவோம்" என்ற தலைப்பிலான சிறப்பு கருத்தரங்கம் மற்றும் பயிற்சிப் பட்டறை கோவை மருத்துவக்கல்லூரியில் நடைபெற்றது.

மருத்துவர்கள், மருத்துவக்கல்லூரிபேராசிரியர்கள், துணை மருத்துவப் பணியாளர்கள் மற்றும்மருத்துவ மாணவர்களுக்காக நடத்தப்பட்ட இந்நிகழ்வில், கண் தானத்தின் அவசியத்தை உணர்த்தும் வகையிலும், கண் தான நடைமுறைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலும் பல்வேறு அமர்வுகள் இடம்பெற்றன.

நிகழ்ச்சியின் தொடக்கமாகப் பதிவு மற்றும் கண் தான உறுதிமொழி ஏற்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. தொடர்ந்து, கருவிழிப் பார்வையின்மை பாதிப்புகள், கண் தான நடைமுறைகள், கண் வங்கி சேவைகள், கண் எடுப்பதற்கான உடற்கூறியல் வழிமுறைகள் மற்றும் கண் தானம் குறித்த தவறான நம்பிக்கைகள் குறித்து சிறப்பு மருத்துவர்களால் விரிவான விளக்கவுரைகளும் கலந்துரையாடல்களும் நடைபெற்றன.

மேலும், துயரத்தில் இருக்கும் உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு மனநல ஆலோசனைகள் வழங்கி கண் தானத்திற்கு ஒப்புதல் பெறுவது குறித்த வழிமுறைகளும் கற்றுத்தரப்பட்டன. மதியத்திற்குப் பின், கண் எடுக்கும் தொழில்நுட்பங்கள் தொடர்பான நேரடிச் செயல்முறைப் பயிற்சி நடத்தப்பட்டது. இடைவேளையின்போது மருத்துவக் கல்லூரி மாணவர்களின் கண் தானவிழிப்புணர்வுநாடகமும் அரங்கேற்றப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் ஐ.எம்.ஏ தமிழ்நாடு மாநிலத் தலைவர் டாக்டர் பி. ஸ்ரீதர், கோவை மருத்துவக் கல்லூரி முதல்வர் பேராசிரியர் டாக்டர் எம். கீதாஞ்சலி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக பங்கேற்றனர். நிகழ்ச்சியில்

ஐ.எம்.ஏ கோவை தலைவர் டாக்டர் கோஷல் ராம்,

ஐ.எம்.ஏ கோவை கௌரவச் செயலாளர் டாக்டர்டி.பரமேஸ்வரன், பொருளாளர் பாலமுருகன்,

ஐ.எம்.ஏ மகளிர் மருத்துவர் பிரிவு தலைவர் டாக்டர் அனுஷா கோஷல் ராம், ஐ.எம்.ஏ தமிழ்நாடு மாநிலத்தின் தலைவர் தேர்வு 2026, டாக்டர் ஏ. கே. ரவிகுமார் தலைமை விருந்தினராகவும், மற்றும் டாக்டர் சி. பி. சண்முக சுந்தரம், தமிழ்நாடு கண் மருத்துவர்கள் சங்க தலைவர் டாக்டர் வி. ஆர். விஜயராகவன் ஆகியோர் கலந்து கொண்டனர்.மேலும்,டாக்டர் பழனிசாமி, டாக்டர் ராஜேஷ் பாபு, கோவை மருத்துவக் கல்லூரி துணை முதல்வர் டாக்டர் சுஜாதா, பேராசிரியர் டாக்டர் சுமதி,

கண் மருத்துவச் சங்க நிர்வாகிகள், சுகாதாரப் பணிகள் இணை இயக்குநர், துணை இயக்குநர் மற்றும் மருத்துவக் கல்லூரி கண் மருத்துவம் மற்றும் உடற்கூறியல் துறைப் பேராசிரியர்கள், துறைத் தலைவர்கள் பலர் கலந்துகொண்டனர். முடிவில் பயிற்சிப் பட்டறையில் பங்கேற்றவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.

## மதுராந்தகம் சட்டமன்ற இடைத்தேர்தலில்

# அதிமுக வேட்பாளர் கனிதா சம்பத் கழக நிர்வாகிகளை சந்தித்து ஆதரவு திரட்டினார்



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம்சட்டமன்றதொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடும்அதிமுக வேட்பாளர் கனிதா சம்பத் தொகுதிக்குட்பட்ட அச்சிறுப்பாக்கம் வடக்கு தெற்கு ஒன்றியம் எல்.எண்டத்தூர், ஒரத்தி, ஊராட்சிகளில் அதிமுக நிர்வாகிகளை சந்திக்கும் நிகழ்ச்சியினை அச்சிறுப்பாக்கம் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் பெரும்பாக்கம் விவேகானந்தன், அச்சிறுப்பாக்கம் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் டாக்டர் ரங்கராஜன் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்ச்சியில் செங்கல்பட்டு கிழக்கு மாவட்ட கழக செயலாளர் திருக்கழுக்குன்றம் எஸ் ஆறுமுகம், மாநிலங்கவை உறுப்பினர் தனபால், மாவட்ட அம்மாபேரவை செயலாளர் ஆனூர் பக்தவச்சலம் வேட்பாளர் கனிதா சம்பத் கலந்து கொண்டு கழக நிர்வாகி களை சந்தித்து சால்வை அணிவித்து இரட்டை இலை சின்னத்துக்கு வாக்களிக்குமாறு கழக நிர்வாகிகளிடம் வாக்கு சேகரித்தார் கருங்குழி முன்னாள் பேரூராட்சி தலைவர் மஞ்சுளா புருஷோத்தமன் அச்சிறுப்பாக்கம் தெற்கு ஒன்றிய மகளிர் அணி செயலாளர் ரோகாம்பாள் ஒன்றிய குழு உறுப்பினர் சந்திரபாபு ஒரத்தி ஊராட்சி மன்ற தலைவர் மலர்விழி அருள் உள்ளிட்ட ஒன்றிய கிளைக் கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



தென் தென்காசி என்று அழைக்கப்படும் பவானி கூடுதுறை மூன்று நதிகள் ஒன்று கூடும் அதன் நதிகள் பெருமையும் ஈரோடு வளத்தையும் பெருமைகளையும் மகா கும்பமேளா ஆலோசகர் கூட்டம் நடைபெற்றது கும்பமேளாவின் தேதி முன்பே அருவிகப்பட்டுள்ளது 5.5.2027 அன்று நடைபெற்ற உள்ளது அருவிகப்பட்டுள்ளது கும்பமேளாவிற்கு இன்று நடைபெற கூட்டத்திற்கு சமுக சேவை பொறுப்பில் உள்ள சில முக்கிய ஆலோசகர்கள் கலந்து கொண்டனர் அவர்களின் அறிவுரையல் கும்பமேளா சிறப்பாக நடைபெறும் என்று கமிட்டி குழு முடிவெடுத்துள்ளது

# தூத்துக்குடியில் பாரதியார், இம்மானுவேல் சேகரன் நினைவு தினம் முன்னாள் அமைச்சர் கீதா ஜீவன் தலைமையில் சங்க நிர்வாகிகளும் மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி!



தூத்துக்குடியில் பாரதியார் மற்றும் இம்மானுவேல் சேகரன் நினைவு தினத்தையொட்டி திமுக முன்னாள் அமைச்சர் பி.கீதா ஜீவன் தலைமையில் சங்க நிர்வாகிகளும் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

தமிழ்மொழியின் மறுமலர்ச்சிக்கும், பெண்ணுரிமைக்கும், சமூக நீதிக்கும் வித்திட்ட புரட்சிக் கவிஞன், விடுதலைப் போரின் அக்னிக்குஞ்சு "மகாகவி பாரதியார் 105வது நினைவு தினத்தை முன்னிட்டும் மற்றும், சமூகநீதி, சமத்துவம் மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைக்காக வாழ்நாள் முழுதும் போராடிய தியாகி இம்மானுவேல் சேகரன் 69வது நினைவு தினத்தை முன்னிட்டும் இவ்விரு தலைவர்களின் திருவுருவப்படத்திற்கும் வடக்கு மாவட்ட திமுக சார்பில் எட்டையாபுரம் சாலையில் உள்ள கலைஞர் அரங்கில் அலங்கரிக்கப்பட்ட அவர்களது படத்திற்கு வடக்கு மாவட்ட திமுக செயலாளரும் முன்னாள் அமைச்சருமான கீதாஜீவன் மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

இதை தொடர்ந்து முத்தரையர் கனவா மீன்பிடி நலச்சங்க பொருளாளர் எஸ்.ஆர். சந்தனராஜ் மற்றும் தூத்துக்குடி அண்ணா சங்குகுளி சங்கத் தலைவர் இசக்கிமுத்து உள்ளிட்ட சங்க நிர்வாகிகள் மகாகவி பாரதியார் 105வது நினைவு தினத்தை முன்னிட்டும் மற்றும், சமூகநீதி, சமத்துவம் மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைக்காக வாழ்நாள் முழுதும் போராடிய தியாகி இம்மானுவேல் சேகரன் 69வது நினைவு தினத்தை முன்னிட்டும் இவ்விரு தலைவர்களின் திருவுருவப்படத்திற்கும் மலர் தூவி மரியாதை செலுத்தினர். நிகழ்ச்சியில்தூத்துக்குடி மாநகரச் செயலாளர் ஆனந்தசேகரன், மாநகராட்சி துணை மேயர் ஜெனிட்டா, முத்தரையர் கனவா மீன்பிடி நலச்சங்கத் தலைவர் முனியசாமி, துணைத்தலைவர் ராஜேந்திரன், செயலாளர் பாலு, துணைச் செயலாளர் ஜெகன், ஒருங்கிணைப்பாளர் வெள்ளைச்சாமி, ஆலோசகர் இசக்கிமுத்து உள்ளிட்ட சங்க நிர்வாகிகளும் மற்றும் கவுன்சிலர்கள், பகுதி செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் திரளாகக் கலந்து கொண்டு பங்கேற்று மரியாதை செலுத்தினர்.

# விநாயகர் சதுர்த்தியையொட்டி அதிகரித்த பூக்கள் விலை

விநாயகர் சதுர்த்தி மற்றும் முகூர்த்த நாள் எதிரொலியாக திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை பூ மார்க்கெட்டில் பூக்கள் விலை கிடுகிடுவென உயர்ந்துள்ளது.தேவை அதிகரிப்பு மற்றும் கடந்த சில மாதங்களாக நிலவி வரும் வறட்சி காரணமாக பூக்களின் உற்பத்தி குறைந்திருந்தது.



இந்நிலையில் தற்போது பண்டிகை கால விற்பனையாக பூக்களின் விலை அதிகரித்துள்ளது. திண்டுக்கலில் ஒரு கிலோ மல்லிகை பூவின் விலை நேற்று ரூ.500 ஆக இருந்த நிலையில் இன்று ரூ.1,300 முதல் ரூ.1,500 வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது. அதே போல் முல்லை ஒரு கிலோ நேற்று ரூ.400-க்கு விற்பனை செய்யப்பட்ட நிலையில் கிலோ ரூ.1,000 வரை விற்பனையாகிறது.

ரோஜா பூக்களின் விலை கிலோ ரூ.200-ல் இருந்து ரூ.500ஆகஅதிகரித்துள்ளது. செவ்வந்தி ஒருகிலோரூ.100-ல் இருந்து ரூ.400 ஆக உயர்ந்துள்ளது. இதே போல் சம்பங்கி ஒரு கிலோ ரூ.700, கனகாம்பரம்கிலோரூ.1,200-க்கு விற்பனைசெய்யப்பட்டு வருவது குறிப்பிட த்தக்கது.

## டிசைன் இந்தியா சார்பாக நடைபெற்ற இந்தியாவின் சிறந்த டிசைன் மாணவர் விருதுகள் 2026 போட்டியில் கலந்து கொண்டு வெற்றி கொடி நாட்டிய, கோவை சசி கிரியேட்டிவ் இன்ஸ்டிடியூட் ஆஃப் டிசைன் கல்லூரி மாணவி மித்ரா




கோவை பொள்ளாச்சி சாலையில், சசி கிரியேட்டிவ் இன்ஸ்டிடியூட் ஆ:ஃப் டிசைன் கல்லூரி அமைந்துள்ளது. இங்கு எம்.டெஸ் கம்யூனிகேஷன் டிசைன் பயிலும் மாணவி மித்ரா, இவர் 'டிசைன் இந்தியா' சார்பாக நடைபெற்ற 'இந்தியாவின் சிறந்த டிசைன் மாணவர் விருதுகள் 2026' போட்டியில் கநந்து கொண்டு தனது திறமையை வெளிபடுத்தினர். கம்யூனிகேஷன் டிசைன் துறையில் அவரது படைப்பாற்றல், அர்ப்பணிப்பு மற்றும் ஆர்வம் ஆகியவை, இந்தியாவின் வளர்ந்து வரும் சிறந்த டிசைன் திறமைகளில் ஒருவராக அவரை நிலை நிறுத்தியுள்ளது.

இவரது இந்த சாதனை ஒட்டுமொத்த 'சசி கிரியேட்டிவ்' கல்லூரியையும் பெருமையடையச் செய்துள்ளது.

தொடர்ந்து புதியவற்றை உருவாக்குங்கள், ஊக்கமளியுங்கள், எதிர்காலத்தை வடிவமைத்துக் கொண்டே இருங்கள் என்பது

மித்ராவின் கொள்கைகளில் ஒன்றாக இருந்து வரும் நிலையில், இவரது இந்த படைப்புப் பயணம், அவருக்குத் தேவையான வழிகாட்டுதல், ஊக்குவிப்பு மற்றும் ஆதரவைத் தொடர்ந்து வழங்கி வருகின்றது. இவரது வெற்றிக்காக, கல்லூரி பேராசிரியர்கள், வழிகாட்டி கள், நண்பர்கள், சக மாணவர்கள் என பலரும் இருந்து வரும் நிலையில் இவரது இந்த சாதனையை கல்லூரி நிர்வாகம் வெகுவாக பாராட்டி வருகின்றது என்பது குறிப்பிட த்தக்கது.

## கோவை நவக்கரை பகுதியில் உள்ள, ஈ.ஏ.எஸ்.ஏ. பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் கொண்டாடப்பட்ட விநாயகர் சதுர்த்தி விழா, மாணவ, மாணவியர்கள், 108 விநாயகர் சிலைகளை தாங்களே வடிவமைத்து கல்லூரியில் கொண்டாடினர்



கோவை பாலக்காடு சாலை நவக்கரையில் அமைந்துள்ள ஈ.ஏ. எஸ்.ஏ. பொறியியல் மற்றும்தொழில்நுட்பக்கல்லூரியில், விநாயகர் சதுர்த்தி விழா, கொண்டாட பட்டது. மாணவர்கள் தங்களது படைப்பாற்றல் மற்றும் கலைத்திறனை வெளிப்படுத்தி, விதவிதமான வடிவங்களில் 108 விநாயகர் சிலைகளை உருவாக்கி அசத்தினர். சுற்றுச்சூ ழலைப் பாதுகாக்கும் வகையில் முழுக்க முழுக்க இயற்கையாகக் கிடைக்கும் செம்மண், களிமண், தண்ணீர், தேங்காய் சிரட்டை, தானியங்கள் ஆகியவற்றை மூலப்பொருட்க ளாகப் பயன்படுத்தி, விநாயகர் சிலைகளை மாணவர்கள் உருவாக்கியுள்ளனர். இச்சிலைகளுக்கு மாணவர்கள் தங்கள் கலைநயத்தை வெளிப்படுத்தும் வகையில் வர்ணம்தீட்டி அழகும்செய்துள்ளனர்..மாணவர்கள் தயாரித்த இச்சிலைகள் கல்லூரி அரங்கில், சக மாணவர்களுக்கு வரிசையாகப் பார்வைக்கு வைக்கப்பட்டு, பின்னர் பூஜை செய்து வழிபாடு நடத்தப்பட்டது. பலவித பிரசாதங்கள் விநாயகருக்கு படைக்கப்பட்டன. அதைத்தொடர்ந்து, பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் இணைந்து பக்திப் பாடல்கள் பாடினர்.பின்னர் விநாயகரின் வரலாறு மற்றும் சிறப்பை எடுத்துரைக்கும் வகையில் நடனம் மற்றும் நாடகம் நடைபெற்றது. மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள் அனைவரையும் கவர்ந்தன.

விநாயகர் சிலை தயாரித்தல், விநாயகர் ஓவியம் தீட்டுதல் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

இதற்கான ஏற்பாடுகளை ஈ.ஏ.எஸ்.ஏ., பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியின் தலைவர் டி.ஈ. சுஜாதா,செயலாளர் டி.ஈ. அஜித், தாளாளர் டி.ஈ. ஆதர்ஷ், முதல்வர் முனைவர் இசட். ராபர்ட் கென்னடி பேராசிரியர்கள், அலுவலர்கள் மற்றும் மாணவ, மாணவிகள் ஒருங்கிணைந்து செய்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## கோவை நவஇந்தியா பகுதியில் உள்ள இந்துஸ்தான் கல்லூரி வளாகத்தில் ஸ்ரீ சைதன்யா டெக்னோ பள்ளி சார்பாக நடைபெற்ற திருக்குறள் திருவிழா

### 50,000 மாணவ, மாணவியர்கள் பங்கேற்று திருக்குறளை எடுத்துரைத்து உலக சாதனை படைத்தனர்



கோவை ஸ்ரீ சைதன்யா டெக்னோ பள்ளி சார்பாக, கோவை நவ இந்தியா பகுதியில் உள்ள ஹிந்துஸ்தான் கலை மற்றும் அறிவியல் கல்லூரி வளாகத்தில்,சுமார் 50,000 மாணவர்கள் பங்கேற்ற, மாபெரும் திருக்குறள் திருவிழா நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த விழாவில் தமிழ்நாடு முழுவதும் உள்ள ஸ்ரீ சைதன்யா டெக்னோ பள்ளிகளை சேர்ந்த 50,000 மாணவர்கள் பங்கேற்று, 1330 குறள்களையும் ஒப்புவித்தல் செய்தனர். இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக, 25வது குரு மஹா சன்னிதானம் பேரூராதீனம் சுவாமிகள்,மற்றும்தமிழக பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைஅமைச்சரும், கோவை மாவட்ட பொறுப்பு அமைச்சருமான சம்பத்குமார் ஆகியோர் கலந்து கொண்டு மாணவ மாணவியர்களுக்கு வாழ்த்துக்கள் தெரிவித்ததுடன் மாணவர்கள் மத்தியில் கூறியதாவது... திருக்குறள் தற்கால மாணவர்களுக்கு எவ்வாறு வழிகாட்டியாக, அமைகிறது என்பதை சுட்டிக்காட்டினர்.

மேலும் திருக்குறளில் உள்ள 1330 குறள்களின் ஆழமான கருத்துக்களையும்,அர்த்தங்களையும் மாணவர்கள் தங்களது வாழ்வில், கடைப்பிடிக்க வேண்டியதன் அவசியம் குறித்து எடுத்துரைத்தனர். இவ்விழாவில் ஸ்ரீ சைதன்யா பள்ளியின் இயக்குனர் சீமா போபண்ணா சிறப்பு விருந்தினராக பங்கேற்று மாணவர்களின் திறமைகளை வாழ்த்தினார். மாணவர்களின் கல்வி வளர்ச்சியோடு, பண்பாடு, மொழிப்பற்று, மற்றும் தலைமைத்துவ பண்புகளை வளர்ப்பதன் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். இவ்விழாவில் பங்கேற்ற மாணவர்களுக்கு தனது பாராட்டுகளையும்தெரிவித்தார். மேலும் பள்ளியின் தமிழ்நாடு செயல்பாட்டு தலைவர் ஜே. ஹரிபாபு கலந்து கொண்டு மாணவர்களுக்கு ஊக்கமும், உற்சாகமும் தெரிவித்தார். உலக சாதனை நோக்கில் நடைபெற்ற இந்த மாபெரும் திருக்குறள் திருவிழாவில், உலக சாதனை புத்தக அலுவலர்களான அங்கீதா ஷா,மற்றும் ரவி ஆகியோர் கலந்து கொண்டு உலக சாதனை புத்தக நிறுவன சான்றுகளை மாணவர்களுக்கு அளித்தனர் இவ்விழாவில், பள்ளியின் உதவி நிர்வாக மேலாளர்கள், பள்ளி முதல்வர்கள், ஒருங்கிணைப்பாளர்கள், ஆசிரியர்கள், மற்றும் மாணவ மாணவியர்கள், பங்கேற்று விழாவினை சிறப்பித்தனர். தமிழகத்தில் உள்ள ஸ்ரீ சைதன்யா டெக்னோ பள்ளியின் பல்வேறு கிளைகளில் இருந்து சுமார் 50,000 மாணவர்கள் ஒரே நேரத்தில் திருக்குறளை ஒப்புவித்தல் செய்தது, லண்டன் உலக சாதனை புத்தக அமைப்பால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிட த்தக்கது.

## மதுரை விமான நிலையம் செல்லும் சாலையில் வெள்ளக்கல் கிராமத்தில் உள்ள முனியாண்டி சாமி கோவிலில் கிடா வெட்டு திருவிழா



மதுரைவிமான நிலையம்செல்லும்சாலையில் வெள்ளக்கல் கிராமத்தில் பழமை வாய்ந்த அருள்மிகு கழுங்கடி முனியாண்டி சாமி கோவில் உள்ளது. இந்த முனியாண்டி கோவில் இரண்டு வருடத்திற்கு ஒருமுறை கிடா வெட்டு திருவிழா நடத்துவது வழக்கம், இந்த நிலையில்38ஆம்ஆண்டு திருவிழா வெகு விமர்சனம் நடைபெற்று வருகிறது இந்த நிலையில் திருவிழாவை முன்னிட்டு கோவிலுக்கு வரும் பக்தர்களுக்கு கிடாவெட்டி விருந்து வழங்ககாலை 10.30மணி முதல் மாலை 4 மணி வரை மாபெரும் சமபந்தி அசைவ விருந்து அன்னதான விழா நடைபெறும்.

இந்த முனியாண்டி கோயிலில் பக்தர்கள் நேர்த்திக்கடனாகவழங்கப்பட்ட ஆடுகளை இரவு முழுவதும் வெட்டி சமைத்து காலையில் கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்படுவது வழக்கம்.

இன்று 38 ஆவது ஆண்டு திருவிழாவை ஒட்டி நேற்று காலை கிடாவுடன் பொங்க பானை ஊர்வலம் நடைபெற்றது. இரவு 12 மணிக்கு சிறப்பு பூஜைகள் செய்யப்பட்டு முனியான்டி கோவில் முன்பு ஆட்டு கிடாய்கள் விடிய விடிய வெட்டப்பட்டது. இன்று அதிகாலை முதல் அந்த கிடாக்களை சமைத்து பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை நடைபெறும் இந்த திருவிழாவில் பெருங்குடி, திருப்பரங்குன்றம், சிந்தாமணி, சாமநத்தம் என மதுரை மாவட்டத்திலுள்ள பல்வேறு கிராமங்களில் இருந்து 25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் இந்த அசைவ விருந்துல் கலந்து கொள்வார்கள்.

இந்த ஆண்டு கழுங்கடி முனியாண்டி கோவிலில் நேர்த்திக்கடனாகவழங்கப்பட்ட 450 ஆட்டு கிடாய்கள் வெட்டப்பட்டு ஆவி பறக்க சமைக்கப்பட்ட கறி விருந்து இன்று காலை 10 மணி முதல் தொடங்கி இரவு வரை கோவிலுக்கு வரும் பக்தர்களுக்கு அன்னதானமாக வழங்கப்பட உள்ளது.

இந்த அன்னதானத்திற்காக சுமார் 10 ஆயிரம் கிலோ அரிசி சமைக்கப்பட்டு நூற்றுக்கும் மேற்பட்ட சமையலாளர்கள் தொடர்ந்து வேலை செய்து வருகின்றனர்.

இவ்விழாவில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் பங்கேற்பதாலும் காலை முதல் மாலை வரை அசைவ விருந்து அன்னதானம் நடைபெறுவதால் இத்திருவிழாவில் எந்தவித அசம்பாவிதமும் ஏற்படாமல் இருப்பதற்காக அவனியாபுரம் காவல் துணை ஆனையர் தலைமையில் 50க்கும் மேற்பட்ட காவல் துறையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அன்னதான விழாவில் தமிழக எரிசக்தி மற்றும் சட்டத்துறைஅமைச்சர்சிடிஆர் நிர்மல் குமார் கலந்து கொண்டார். அசைவு விருந்தை ருசிப்பதற்காக நீண்ட வரிசையில் பக்தர்கள் காத்திருந்து உணவருந்தி செல்கின்றனர்.




கள்ளக்குறிச்சியில் ஒருங்கிணைத்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சட்டப்பேரவையில் தமிழக முதலமைச்சரின் ஆணவப் பேச்சை கண்டித்து கள்ளக்குறிச்சி திமுக மேற்கு மாவட்ட கழக செயலாளர் வசந்தம் கார்த்திகேயன் எம்எல்ஏ தலைமையில் நடைபெற்றது. இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் கள்ளக்குறிச்சி திமுக கிழக்கு மாவட்டகழகசெயலாளர்உதயசூரியன்,கள்ளக்குறிச்சிநாடாளுமன்றஉறுப்பினர்மலையரசன்மற்றும்உளுந்தூர்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் வசந்தவேல் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்

## ஈரோடு அருகே கரும்பு லாரியை வழிமறித்த ஒற்றை யானை; விநாயகர் சதுர்த்தி வாழ்த்து தெரிவித்த ஓட்டுநர்



ஈரோடு அருகே கரும்பு லாரியை வழிமறித்த ஒற்றை யானைக்கு விநாயகர் சதுர்த்தி வாழ்த்து தெரிவித்த ஓட்டுநர்.

ஈரோடு மாவட்டம் திம்பம் மலைப்பாதை வழியாக தினமும் நூற்றுக்கணக்கான வாகனங்கள் இயக்கப்பட்டு வருகின்றன. அடர்ந்த வனப்பகுதி என்பதால், இந்த சாலையில் அடிக்கடி காட்டு யானைகள், சிறுத்தைகள், மான்கள் உள்ளிட்ட வனவிலங்குகள் நடமாடுவது வழக்கம்.

குறிப்பாக, சத்தியமங்கலம் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் இருந்து கரும்பு ஏற்றிக்கொண்டு வரும் லாரிகளை குறிவைத்து, சில யானைகள் சாலையில் உலா வருவது தொடர்கதையாகிவருகிறது. கரும்பு ஏற்றி வந்த லாரியை பார்த்ததும் காட்டில் இருந்து ஒரு யானை சாலையை நோக்கி ஓடி வந்தது. லாரியை மறித்து அது நின்றதால், ஓட்டுநர் லாரியை மெதுவாக நிறுத்தினார். யானையை கண்டு அச்சப்படாமல், சமயோசிதமாகவும் பாசத்துடனும்செயல்பட்ட அந்த லாரி ஓட்டுநர், "நாளைக்கு உனக்கு பிறந்தநாளு... ஒரு கத்தை கரும்பு எடுத்துக்கோ" என்று பாசத்துடன் கத்தினார். விநாயகரின் மறு உருவமாக கருதப்படும் யானைக்கு, அவர் முன்கூட்டியே தனது சதுர்த்தி வாழ்த்துகளை தெரிவித்தார்.





விழுப்புரத்தில் ஒருங்கிணைந்த திராவிட முன்னேற்ற கழகத்தின் சார்பில்,தமிழ்நாடு சட்டப்பேரவையில் முதலமைச்சர் விஜய்யின் ஆணவப் பேச்சை கண்டித்து, புதிய பேருந்து நிலையம் அருகே உள்ள நகராட்சி திடலில் விழுப்புரம் தெற்கு மாவட்ட பொறுப்பாளர் பொன்.கௌதமசிகாமணி தலைமையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது இதில் துணைப் பொதுச் செயலாளர் முனைவர் க.பொன்முடி கலந்து கொண்டு கண்டன உரை ஆற்றினார் . ஆர்ப்பாட்டத்தில் தி.மு.க. நிர்வாகிகள், தொண்டர்கள் கலந்து கொண்டனர்



வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் ஈரோடு மாவட்டம், நம்பியூர் ஊராட்சி ஒன்றியம், கெட்டிச் செவியூர், காளியப்பம்பாளையம் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் நடைபெற்ற நூற்றாண்டு விழாவில் நடத்தப்பட்ட பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெற்ற மாணவ மாணவியர்களுக்கு நேற்று (12.09.2026) பரிசுகள் வழங்கினார். உடன் கோபி செட்டிபாளையம் வருவாய் கோட்டாட்சியர் சிந்துஜா உட்பட பலர் உள்ளனர்.

# அரசு மரியாதையுடன் இறுதிச்சடங்கு: விடைபெற்றார் சாலமன் பாப்பையா



சாலமன் பாப்பையா உடலுக்கு அரசு மரியாதையுடன் இறுதிச்சடங்கு நடைபெற்றது.

சாலமன் பாப்பையா காலமானார்

பட்டிமன்ற நடுவரும் தமிழறிஞருமான சாலமன் பாப்பையா வயது மூப்பு காரணமாக நேற்று காலமானார். அவருக்கு வயது 90. மதுரையை சேர்ந்த சாலமன் பாப்பையா பட்டிமன்ற நிகழ்ச்சிகள் மூலம் தமிழக மக்கள் மனதில் நீங்கா இடம் பிடித்தார். மதுரை அமெரிக்கன் கல்லூரியில் தமிழ்த்துறை பேராசிரியராக பணியாற்றிய இவர், தமிழ் இலக்கியங்கள் குறித்து ஆற்றிய உரைகளாலும் பிரபலமானவர். திருக்குறள் உள்ளிட்ட பழந்தமிழ் இலக்கியங்களுக்கு உரை எழுதியுள்ளார்.

சாலமன் பாப்பையா மறைவுக்கு பல்வேறு தரப்பினரும் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்து வருகிறார்கள். தமிழக அரசு சார்பில் அமைச்சர் நிர்மல் குமார் உள்ளிட்டோர் சாலமன் பாப்பையாவின் உடலுக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர். சாலமன் பாப்பையா உடலுக்கு அரசு மரியாதையுடன் இறுதிச்சடங்கு நடைபெறும் என அறிவிக்கப்பட்டது.

அமைச்சர் நிர்மல்குமார் தனது எக்ஸ் தளத்தில் இந்த அறிவிப்பினை வெளியிட்டார்.

உடல் தகனம்

இந்த நிலையில், மதுரை வெப் மெமோரியல் தேவாலயத்தில் வைத்து உறவினர்கள் முன்னிலையில் அவரது உடலுக்கு இறுதி மரியாதை செலுத்தப்பட்டது. தொடர்ந்து, அவரது உடலுக்கு அரசு மரியாதையுடன் இறுதிச்சடங்கு நடைபெற்றது. துப்பாக்கி குண்டுகள் முழக்கம் இல்லாமல் சாலமன் பாப்பையாவின் உடலுக்கு கவுரவ மரியாதை அளிக்கப்பட்டது. அரசு சார்பில் அமைச்சர்கள் நிர்மல்குமார், விஸ்வநாதன் ஆகியோர் அவரது உடலுக்கு இறுதி மரியாதை செலுத்தினர். இதையடுத்து தத்தநேரி மின் மயானத்தில் சாலமன் பாப்பையாவின் உடல் தகனம் செய்யப்பட்டது.

# மதுராந்தகம், தாராபுரம் இடைத்தேர்தலுக்கு தடை விதிக்க வேண்டும்: சென்னை ஐகோர்ட்டில் மனு

தமிழகத்தில் காலியாக உள்ள 7 சட்டசபை தொகுதிகளில், மதுராந்தகம், தாராபுரம் ஆகிய 2 தொகுதிகளுக்கு மட்டும் அடுத்த மாதம் (அக்டோபர்) 6-ந் தேதி இடைத்தேர்தல் நடைபெற இருக்கிறது. இதற்கான வேட்புமனு தாக்கல் கடந்த 9-ந் தேதி தொடங்கியுள்ள நிலையில், இடைத்தேர்தலிலும் த.வெ.க., தி.மு.க., அ.தி.மு.க., நாம் தமிழர் ஆகிய கட்சிகள் இடையே 4 முனைப்போட்டி நிலவுகிறது. இதில், நாம் தமிழர் கட்சியை தவிர, தேர்தல் களம் காணும் 3 கட்சிகளும் வேட்பாளர்களை அறிவித்துவிட்டன. கடந்த தேர்தலில் அ.தி.மு.க. சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற மரகதம் குமரவேல் (மதுராந்தகம்), சத்தியபாமா (தாராபுரம்) ஆகிய 2 பேரும் தற்போது த.வெ.க. சார்பில் அதே தொகுதிகளில் களம் காண்கின்றனர்.



இந்த நிலையில், இடைத்தேர்தல் நடத்துவதற்கு தடை விதிக்க வேண்டும் என்று கோரி சென்னை ஐகோர்ட்டில் பொதுநல மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தவெக வேட்பாளர்கள் மரகதம் குமரவேல், சத்தியபாமாவின் வேட்புமனுக்களை ஏற்க தடை விதிக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. ராஜினாமா செய்பவர்களை குறிப்பிட்ட காலத்துக்கு தேர்தலில் போட்டியிட தடை விதிக்க சட்டம் கொண்டு வர வேண்டும் எனவும் மனுவில் கூறப்பட்டுள்ளது.

பிரதான எதிர்க்கட்சியான தி.மு.க. சார்பில் ஐ.பரந்தாமன் (மதுராந்தகம்), எஸ்.சுகன்யா (தாராபுரம்) ஆகியோர் வேட்பாளர்களாக போட்டியிடுகின்றனர். அ.தி.மு.க. சார்பில் கணிதா சம்பத் (மதுராந்தகம்), பானுமதி (தாராபுரம்) ஆகியோர் போட்டியிடுகின்றனர். தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல் தொடங்கியுள்ளது. தேர்தல் நடத்துவதற்கான முழு ஏற்பாடுகளும் நடைபெற்று வருகின்றன



ஈரோடு மாவட்டம், மேட்டுக்கடை சூர்யா பொறியியல் கல்லூரி மைதானத்தில் மாவட்ட அளவிலான முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகளுக்கான கால்பந்து போட்டிகளை கைத்தறி துணிநூல் மற்றும் கதர்துறை அமைச்சர் ம.விஜய் பாலாஜி நேற்று (12.09.2026) தொடங்கி வைத்தார். உடன் ஈரோடு மேற்கு சட்டமன்ற உறுப்பினர் கா.க.ஆனந்த் மோகன், மாவட்ட விளையாட்டு அலுவலர் திவ்ய நாகேஸ்வரி உட்பட பலர் உள்ளனர்.



ஈரோடு மாவட்டம், அசோகபுரம் பகுதியில் உள்ள மழைநீர் வடிகால் கால்வாய் தூர்வாருவது மற்றும் அப்பகுதியில் உள்ள தேவையற்ற புதர்களை அகற்றுவது குறித்து கைத்தறி துணிநூல் மற்றும் கதர்த்துறை அமைச்சர் ம.விஜய் பாலாஜி மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி , ஆகியோர் நேற்று (12.09.2026) நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டனர். உடன் ஈரோடு மேற்கு சட்டமன்ற உறுப்பினர் கா.க.ஆனந்த் மோகன், ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அர்பித் ஜெயின் உட்பட பலர் உள்ளனர்.




ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் கைத்தறி துணிநூல் மற்றும் கதர்த்துறை அமைச்சர் ம.விஜய் பாலாஜி தலைமையில் வளர்ச்சித் திட்டப்பணிகள் குறித்து துறை சார்ந்த அலுவலர்களுடன் ஆய்வுக்கூட்டம் நேற்று (12.09.2026) நடைபெற்றது. உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி , ஈரோடு மேற்கு சட்டமன்ற உறுப்பினர் கா.க.ஆனந்த் மோகன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் செல்வி. கிரண் ஸ்ருதி , ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அர்பித் ஜெயின் , மாவட்ட வருவாய் அலுவலர் சு,சாந்த குமார் உட்பட பலர் உள்ளனர்.

# Remains of JaishEMohammed terrorist, M4 carbine found in Jammu and Kashmir's Doda upper reaches

*The investigation is ongoing, targeting individuals involved in secessionist narratives linked to cross-border communications.*

*Security forces on Saturday recovered the remains of a Pakistani Jaish-e-Mohammed (JeM) terrorist alongside a US-made M4 carbine from the upper reaches of Jammu and Kashmir's Doda district, officials said.*

*The Jammu and Kashmir Police confirmed the recovery on X: "You can run but you can't hide! SOG Doda, RR and CRPF retrieved the remains of a Pakistani Jaish-e-Mohammed terrorist, who was neutralised earlier in a joint operation. A night-enabled M4 has also been recovered."*



*Officials said the remnants and the night-enabled automatic rifle were retrieved near a glacier in the high-altitude Seoj Dhar forest area, which connects Doda's Bhaderwah valley with the neighbouring Udhampur and Kathua districts. The identity of the slain terrorist has not yet been established.*

*Simultaneously, the state investigation agency (SIA), Jammu, carried out morning search operations across five locations in the Mandi and Surankote areas of Poonch district and the Ramnagar area of Udhampur district.The agency is investigating a case involving the propagation of secessionist narratives and radicalisation activities via online and offline channels, including social media platforms operated from across the border.*

*"During the course of investigation, certain individuals were found to be allegedly communicating with suspicious persons located across the Line of Control (LoC)/border," an official said, adding that the searches aimed to gather and verify material evidence.*

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004, Editor FARUK ALI M.